# யாழ் தெல்லி நகர்
# ஸ்ரீ துர்க்காம்பாள் நான்மணிமாலை



உ
ஓம்
ஸ்ரீ துர்க்காம்பாள் துணை

# யாழ்ப்பாணத் தெல்லியம்பதி

# ஸ்ரீ துர்க்காம்பாள் நான் மணிமாலை

நூலாசிரியர்:-
சைவமணி, சிவமயச் செல்வி
புலவர்.சி. விசாலாட்சி

குப்பிளான்
ஏழாலை

1993

குருகுலம்
கிளிநொச்சி

உ

ஸ்ரீ அம்பாள் துணை

## அருள்மொழி அரசி
## வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள்
## அன்புடன் வழங்கிய ஆசியுரை

சைவநன்மணி சிவமயச் செல்வி புலவர் விசாலாட்சி அவர்கள் உள்ளும் புறமும் சிவத்தன்மை மிக்கவர். இளமையிலேயே தமிழையும் சைவத்தையும் தன்னிரு கண்களாகப் போற்றிக் கற்றுணர்ந்து அதன் வழி ஒழுகி வருபவர். சிறந்த பேச்சாளர். கிளிநொச்சிக் குருகுல வளர்ச்சியிலும், வன்னி மாவட்டச் சைவ எழுச்சியிலும் கருதூன்றிச் செயல்பட்டவர்.

இவரது படைப்புக்களாகிய "சிந்தனைத் தேன்தளிகள்", "சைவ நாற்பதங்கள் காட்டும் ஆலய வழிபாட முதலிய நூல்களைப் பார்க்கும் வாய்ப்பு அடியேனுக்குக் கிட்டியது சொல்லைப் போலவே எழுத்திலும் தனக்கெனத் தனிப்பாணி அமைத்துக் கொண்டு சைவ உண்மைகளை மிக எளிய முறையிலே மக்களுக்கு விளங்கச் செய்யும் பாங்கை இவரது எழுத்துக்களிலே காண்கின்றோம். "யாழ்ப்பாணத் தெல்லி நகர் ஸ்ரீ துர்க்கைத் தாயின் மீது ஆராது அன்பு கொண்டு எண்ணத்தையே நூலாக்கி நாலினால் நான்மணிகளாக் நன்மணிகளைக் கோர்த்த தூய மலர்ப் பாதத்தில் சமர்ப்பித்தள்ளார் புலவர் விசாலாட்சி அவர்கள்.

யாழ் தெல்லிப்பழை ஸ்ரீ தர்க்காம்பாளை நினைக்கம் போதே, தர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியையும் அவர்களையும் இணைத்து நினைப்பது நன்றியும் பக்தியும் நிறைந்த இவரது நெஞ்சிற்கு ஓர் எடுத்துக்காட்டு. நல்ல உள்ளத்தினின்று ஊற்றெழுந்த இந்த நான்மணி மாலை நாயகியின் பொன்னார் இணையடிகளுக்கச் சூட்டப்பட்ட நறுமணமாலை.

மாலையின் ஒளியில் தோய்வதும் பயன் துய்ப்பதம் பக்தர்களின் கடன் என ஆசி கூறி அமைகின்றேன்.

அன்புடன்

**வசந்தா வைத்தியநாதன். ஜே.பி.**

உ

## ஸ்ரீ துர்க்காம்பாள் துணை

## அடியேனின் ஒரசில வார்த்தை

"முத்தமிழால் வைதாரையும் முருகன் வாழ வைப்பான்", என்பது திருப்புகழ் அருளிய அருணகிரி நாதரின் அருளமுத வாக்காகும். ஏதோ சில சொற்களைப் படித்த பயனோ, அன்னை ஸ்ரீ துர்க்கா மீது கொண்ட பக்தியோ இப்பாடல்களை யாத்து விட்டோம்.

துர்க்கா துரந்தலி சிவத்தமிழ்ச் செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள் தமது ஆலயத்தில் அறநிதியம் ஒன்று வைத்திருப்பதாகவும், அதற்கு உதவும்படி மக்களை வீரசே[illegible] தினகரன் போன்ற பத்திரிகைகள் மூலம் பக்தர்கட்கு வே[illegible]காள் விடுத்தார்.

செயற்கரிய செயல்களைப் பேச்சாலும் மூச்சாலுமன்றி மகளிர் இல்லத் தாபன வளர்ச்சியின் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றார் அம்மையார். அதனால் அறநிதியத்திற்கும் ஏதாவது உதவி செய்ய விரும்பினோம். பிறவியிலேயே தரித்திர சிகாமணியாகிய நாம் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல ஆசைப் பட்டால் சாத்தியப்படுமா ?

துர்க்கா துரந்தரியின் 7.1.1992ல் பிறந்த தினத்தன்று மேற்படி பாடலை அன்னை துர்க்காம்பாள் மீது மனம் நொந்து பயபக்தியுடன் பாடி எழுதினோம். பின்னர் இதனை நூல் வடிவமாக்கி விற்பதனால் வரும் சிறு தொகைப் பணத்தை அன்னை அவர்களின் அறநிதியத்திற்குச் சமர்ப்பணம் செய்வதென உறுதிகொண்டு அருள்மொழி அரசி வித்தவான் ஜே.பி. திருமதி வசந்தா வைத்தியநாதன் சர்மா அவர்களிடம் ஆசியுரை கேட்டோம். அவர்கள் மனமுவந்தருளினார்கள். அவர்களுக்கு அடியேனின் நன்றி.

இத்துடன் இந்நூலை வெளியிடத் தூண்டுதலாக இருந்த கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர பிரம்ம ஸ்ரீ குஞ்சித பாதம் குருக்கள் ஐயா அவர்கட்கும், இந்நூலை அழகிய மூவர்ண அட்டையுடன் அச்சில் வடித்துத் தந்த ரஜனி அச்சக முதலாளி சைவப் பெரியார் ஈஸ்வரமூர்த்தியவர்க்கும் அடியேனின் நன்றிகள் பல.

துர்க்கா துரந்தரி இலங்கையின் வடக்கே கொற்றவைத்தெய்வத்துடன் பக்திவளம் தமிழ் வளம் பெருக்க, அருள்மொழி அரசி இலங்கையின் தெற்கே விவேகானந்த சபையில் திருமுறை முற்றோதல் ஓதன் தூண்டுதலாக இருந்து பக்தி வளம் தமிழ்வளம் பெருக்குவது இலங்கைவாழ் பெண்ணுலகு செய்த மாபெரும் புண்ணியமாகும்.

புலவர் சி. விசாலாட்சி

# குப்பிழான் சோதி விநாயகர்
## காப்பு

சீர்தரு தெல்லிநகர் ஸ்ரீ துர்க்கா நான்மணிக் கோவைபாட
சீர்மலி யாப்புஞ்செஞ் சொல்நய மெல்லாம் சிறக்கவருள்
காரென் அவல்பொரி மோதகம் நாடும் குணபதியாம்
பார்புகழ் குப்பிளான் சோதி விநாயகனே காத்தருளே

## அவையடக்கம்

எழுத்தொடு சொற்பொருள் பெருக்கும் நயமும்
எழுந்து பெரியாரை வணங்கி அவர்தம்
விழுத்தொண்டு செய்துவாழ் பண்பும், கோயிலில்
விழுந்து கும்பிட்டு இறைவியே துணையென
தொழுதுவரும் தன்மையும் சிறிதுமில் நாயேன்
தெரிந்தோ தெரியாமலோ நான் மணிக் கோவை
எழுதிச் சூட்ட முயன்றேன் சிவத்தமிழின்
எழிலரசித் தொண்டர்காள் பிழைகள் பொறுப்பீரே

## நூல்
### ஆசிரியப்பா

1. ஏழ்தலம் நெருங்கும் ஏழாலை குப்பிளான்
வீழ்ந்து வணங்கும் பலதலம் சூழ்ந்த,
யாழ்குடா நகரின் மணிமுடிக் கிரீடமாய்
ஏழுலகும் புகழும் எழில்நிறை நீர்நிலமும்,
தேன்சொரி முக்கனி நிறைகா வினங்களும்,
வான்தோய் கற்பக தருவாம் பனைகளும்,
தண்ணிழல் பரப்பும் இலுப்பை வேம்பும்
மண்மகிழ் அன்பும் அறனும் மலிந்த
தெல்லி நகர்ஸ்ரீ துர்க்காம் பிகையே!
அல்லும் பகலும் அடியார் வணங்கும்,
மஞ்சு தவழும் தூல லிங்கமாய்
விஞ்சு அழகினை வாரி அளிக்கும்
இராஜ கோபுரம் காலங் கடந்த
புராண வரலாற்றைக் கருத்தினுட் புகட்டும்
வண்ண வண்ணக் கலைநிறை சிற்பமும்,
எண்ண எண்ண முடியாப் பவக்கடல்

அளிக்கும் ஐம்புல வேடரும், மும்மதக்
களிற்றினை ஒக்கும் மும்மலமும் அடக்கும்
அங்குசம் போன்று அருள்சொரி சூக்கும
லிங்கமாய் மூலஸ்தா னமூர்த்தி தேவியின்
விக்கிரகம் அமைந்த ஆலயம் கொண்டு
மக்களைக் காக்கும் மங்கையற் கரசியே!
அறுபத்து நான்கு சக்திபீ டங்களில்,
ஒன்றாய் அமர்ந்த தாயே! கந்தனை
யீந்த ஈஸ்வரி! பாம்பும் மதியும்
கங்கையும் அணியும் சிவனார் மகிழும்
அங்கையற் கண்ணி! அம்மணி! மனோன்மணி!
வேத மோதும் நாத ஒலியும்
ஏதிலார் திருமுறை மடத்தில் திருமுறைப்
பண்ணிசை முற்றோ தலொலியும், மண்ணில்
கண்ணிறை ஓம யாகப் புகையும்
சிவத்தமிழ்ச் செல்வியின் பண்பும் காண்பதற்குச்
சிவனை மறந்து வந்து
நவமாய்க் கோயில் கொண்டனை அன்னையே!

## ஆசிரியர் விருத்தம்

2. அன்னையே! ஆருயிர்த் தாயே! அமரர்
அல்லல் அகற்ற மகிடனை அழித்தபின்
பொன்னகர் தெல்லி நகர்ப்பதி யாளும்
பண்ணிசைச் சிவத்தமிழ்ச் செல்வி போற்ற
சின்னஞ் சிறியபெண் போல்சிற் றிடையில்
சிவந்த சிற்றா டையணி சோதியே
அன்னம் நாண நடைநடந்து பயிற்றும்
அன்ன பூரணி! எமக்கரு ளம்மா

## வெண்பா

3. மாதவஞ் செய்யும் முனிவர் அகமகிழச்
சோதியாய்த் தோன்றும் செழுஞ்சுடரே-ஆதி
முதல்வனின் பாதி யுடலிடங் கொண்டே
நிதம்நிதம் நீயருள்வா யே!

## கட்டளைக் கலித்துறை

4. ஏந்திழை துர்க்கா துரந்தரி செந்தமிழ்ச் செல்விதங்கம்
தீந்தமி ழோசை தெருவெங்கும் கேட்கத் தயவளிக்கும்
பூந்தா ரணியும் பரமேஸ் வரியே! புவனிபுகழ்
சேர்ந்தனைத் தந்தவளே தெல்லி நகர்ப்பதி சங்கரியே

## அகவல்

5. சங்கரி! கண்மணி! சாம்பவி! பூரணீ!
பங்கயந் செல்வி! பார்புகழ் மகேஸ்வரி!
நாக பூஷணி! நாகம்மா எங்கள்,
சோகம் களையும் சுந்தரி யம்மா
செகதல மெங்கும் சிறுமை நீக்கி
அகப்புறம் பகைமை யகற்றி நல்லக
விளக்காம் நமச்சி வாயமந் திரத்தைக்
களஞ்சியப் பொருளாய் நாவிற் தருவாய்,
வேதம் நான்கும் அருளிய வேதியனும்
பாதம் நோவத் தூதுசெல் கண்ணனும்
களிப்புறக் கலையளி கலைமகள் நீயே
வெளிவளி எரிபுனல் மண்ணும் நீயே
பங்கய பாதம் பணிவார்க் கென்றும்
சங்கடம் நீக்கிச் சரணம் அளிப்பாய்
சரணகோ சம்செய் அன்பரின் நோயும்
மரணமும் நீக்கி மகிழ்ச்சி அளிப்பாய்
கொஞ்சு தமிழ்முறை அருளிய பிள்ளைக்கு
விஞ்சு ஞானம் மிளிர ஞானப்
பாலினைப் பொற்கலம் தன்னிற் கறந்து
மாலின் தங்கையே ஊட்டி என்றும்
திருமுறைச் செல்வி தங்கம் மாவின்
பெருமையை உலகில் நாட்டிய வள்நீயே
அருமை பெறுமா தரணியைப்
பெருமை யாக்கி யருள்செய் பவளே

## ஆசிரிய விருத்தம்

6. பவள வாயிற் குமிழ்புன் னகையும்
பனிநிறை கருங்குவ ளைமலர்க் கண்களும்
சிவந்தரு அருளுங் கொண்ட சிலையே!

சிங்கக் குருளை யேறி மக்களின்
பவந்தீர் தெல்லி நகர்ப்பதி யாளே
புறம் அகப் பகையும் பசிப்பிணி விரட்டிக்
கவலை யொழிக்கநீ தங்கத் தேரில்
கடைக்கண் சாற்றி வந்தருள் தாயே!

## வெண்பா

7. தாயே! தரணியில் நல்லதெல் லிப்பழையில்
நீயே வலிந்துகோயில் கொண்டனை-சேயோம்
அடைக்கலம் தேடியுன் காலடி வந்தோம்
துடைக்கினும் போகோம் அருள்!

## கட்டளைக்கலித்துறை

8. அருள்சொரி தெல்லி நகர்ப்பதி துர்க்காம் பிகையரசி
இருள்செய் மனத்தார் தருகின்ற இன்னல் கொடுமைகளும்
எரிமலை யாகி எழில்வளம் எல்லாம் எரியுமுன்னே
திரிபுர சுந்தரி! தண்ணளி செய்வாய் தயாபரியே

## ஆசிரியப்பா

9. தயாபரி தரணி காக்கும் உன்னருட்
தியான நிலையில் நின்ற தங்கம்
தியாகப் பணிப்பிர வாகம் பெருக,
வாக்குக் காயம் மனமெனும் மூன்றும்
ஊக்கமாய் ஆற்றும் அருஞ்செயல் அளித்தனை
கடல்கடந் துன்னருள் கருணை சொரியும்
இடமாய்த் தெல்லி நகர்ப்பதி தேர்ந்தனை!
மீனவச் சேரியில் மீனவளாய் மலர்ந்து
மீனாட்சித் தெய்வமும் ஆகினை! காசியில்
விசாலாட்சி ஆயும் காஞ்சி காமாட்சி
யாகியும் இருப்பவள் நீயே அம்மா!
ஏகமாய் அனேகமாய் இருப்பவள் நீயே
யாக அவிபொரி ஏற்பவள் நீயே
சீற்றம் கொள்பகை நீக்கி யெம்மை
ஆற்றுப் படுத்துவாய் துர்க்காம் பிகையே
மலையத் துவசன் மகளாய் வந்தனை
பலகலை யாவும் பகர்ந்தவள் நீயே

உலகம் நிலையாமை யுணர்த்தவும் உண்மை
நிலையென உணர்த்தவும் ஐந்து வயதில்
ஆச்சிர மமமைத்துத் தவமும் செய்த
இமவான் மடந்தை உமையே போற்றி
சுமங்கலி திருவிளக் குப்பூசை ஏற்பவள்
நீயே அம்மா! நிமலன் துணைவியும்
நீயே அம்மா! அமரர் துயரம்
துடைத்து அடைக்கலம் அளிக்க ஞானவேல்
படைக்கல மாகவே முருகனுக் கீந்தனை
கல்வித் தெய்வமும் திருவின் தெய்வமும்
பல்லோர் புகழும் வீரத் தெய்வமும்
நீயே ஆனாய் அம்மா உலகோர்
"தாயே" எனஒரு முறைசொல் லமுன்னே
பலமுறை ஓடி வருபவள் நீயே
கலகம் முற்ற முன்னே கருணை
காட்டிக் கயவரை துரத்தி அருள்வாய்
வாட்டம் நீக்கி வாழ்வினை அளிப்பாய்
பேயாய் அலையும் பேயர் பழிக்குமுன்
தாயாய் வருவாய் தண்ணளி அருள்வாய்
நிலையிலா உடலால் நிலைதரு புண்ணியம்
அலைதரு கடல்போல் ஆற்றும் பண்பினை
மலைபோல் இயற்ற மகேஸ்வரித் தாயே
நீயருள் செய்வாய், கல்வித் தானமும்
அன்ன தானமும் வஸ்திர தானமும்
மன்னுபுகழ் பற்பல தானமும் பல்லுயிர்
ஒம்பும் மணிநிறை மண்டபம் பெருகும்
ஆம்பல் வளர்எழில் தடாக மருகில்
அமரும் அருளாம் பிகையே! உயிர்கட்கு
இருள்நிறை ஆணவ வேகம் கெடுக்கும்
மருந்தினை விரைந்தே அருள்வாய் அம்மா
நீல மயிலுடை மாவைக் கந்தனும்
சோலைசூழ் காசி விநாயகர் ஆலயமும்
பலதொழில் ஆலையும் கடைநிறை வீதியும்
தெருக்களும் மாடமும் சூழும் நகரில்
பெருமை பெறுஆ கமவிதிப் படியே
அருமையாய் அமையும் கோயிலில்
பெருமையாய் உறையும் அருட்களஞ் சியமே!

## ஆசிரிய விருத்தம்

10. களஞ்சியப் பொருளைத் திருடர் திருடிக்
கொள்ளை செய்யவே, அவைகளை மீட்ட
வளம்நிறை துர்காம் பிகையே மண்ணில்
வயம்பெறு மன்னரும் உன்பதம் வணங்கிக்
களத்தில் வெற்றி வாகை சூடிக்
காணிக்கை செலுத்தும் காட்சி கூறத்
தளர்வுடை எம்மால் முடியுமோ? சிவனார்
பாகம் இடங்கொள் மலைமகள் உமையே

## வெண்பா

11. உமையே! அமரர் அழுது புலம்ப
நமனாய் மகிடனைக் கொன்ற - எமையாள்
கலைநிறை தெல்லி நகர்ப்பதி தன்னில்
நிலைகொள் துர்காம் பிகை யே!

## கட்டளைக் கலித்துறை

12. துர்க்காம் பிகையே! துதிப்பார் துயரம் துடைப்பவளே!
சர்க்கரைப் பொங்கல் வடைபணி யாரம் சிறந்தநல்ல
கற்பூரம் நாடும் கலைதரு வாணி கலையமுதாய்
சிற்பராஜ கோபுரந் தன்னில் எழுந்தருளி வந்தனையே!

## ஆசிரியப்பா

13. ஏழ்பவம் தாண்டும் தெப்ப மருள
யாழ்நகர் வடக்கிலுறை கொற்வைத் தெய்வமே!
ஐம்புல வேடரும் மும்மத யானையும்
எம்மை வருத்திப் பிறவிக் கடலும்
தள்ள நமனும் காலம் எண்ணி
பள்ளமாம் பாவக் குழியுட் தள்ளமுன்
ஏலவார் குழலியே! எங்கும் பூரண
வெள்ளமாய்ப் பாயும் நின்னரு ளானந்
தத்தேன் அள்ளிப் பருக அருள்வாய்.
சித்தம் சிவனுக் காக்கி யென்றும்
ஞானம் அருள்வாய் ஞானாம் பிகையே
ஞான நடனம் செய்யும் தில்லை
யம்பல நடரா ஜசிவ காமியே

செம்பொரு ளுரைக்கும் சரஸ்வதி நீயே
செல்வம் அளிக்கும் இலக்குமி நீயே
தொல்லை வினையறு துர்க்கா நீயே
வேதம் நான்கும் நான்கு நாணாய்
ஓதற் கரிய ஆகமம் பலகையாய்
ஏழிரு சித்தாந் தசாஸ்திரம் தோழியராய்
பண்மிகு பன்னிரு திருமுறை நல்ல
மண்புகழ் மாணிக் கமணிக் கிரீடமாய்
கலைமகள் வீணை வாசிக்க அலைமகள்
விலை நிறை வெண்சாமரை வீச திருவூஞ்
சலாடும் துர்க்கா போற்றி போற்றி
ஈனச் செயல்தனை நீக்கி ஈயும்
வகைதனை வளமாய் அளிப்பாய் போற்றி
தொகைதரு பொருளும் வேண்டேன் புகழும்
வேண்டேன், நிலையிலா உடலால் என்றும்
மீண்டும் மீண்டும் உன்னிரு பதங்கள்
யாண்டும் போற்றிப் பாட அருள்வாய்
மனதில் இன்பம் மல்கிட அருள்வாய்
உனதென எல்லாம் மதித்திட அருள்வாய்
வறுமை நீங்கி வளம்பெற அருள்வாய்
சிறுமை நீக்கிச் சீலம் அருள்வாய்
தொல்வினை நீக்கித் தோழமை அருள்வாய்
கல்வி ஞானம் கலையுடன் அருள்வாய்
தெல்லியம்பதியில் குடிகொள் தேவியே
பல்லுயிர் கலங்கும் பகைதனைக் கடிதே
நீக்க நிமலினி வருவாய் வருவாய்
போக்கும் வரவும் இல்லாச் சிவனின்
பாகம் அமரும் அம்மையே
ஏகமாய்க் காப்பாய் புவனம் முழுதுமே

## ஆசிரியர் விருத்தம்

14. புவனம் முழுதுமுன் னருளாட் சியாலே
புண்ணியம் பெருகிப் பாவம் தேய
தவஞ்செய் சீலரின் தண்மலர்ச் சோலைசூழ்
தெல்லியம் பதிகாண் மகளிர் இல்லமும்
சிவந்தரு அருள்பெருகத் திருமுறை பாடிச்

செந்தமிழ்த் தேன்நனி சொட்டச் செயல்செய்
சிவத்தமிழ் செல்வி துர்க்கா துரந்தரிபோல்
சிறந்துசைவப் பணிகள் செய்ய அருள்கவே

### வெண்பா

15. வேந்தரும் தேவரும் போற்ற அருள்சொரி
சேந்தனின் தாயே! மனோன்மணி-பூந்தார்
நிறைந்தவளே எங்குறை தீர்த்தரு ளென்று
பறைவது கேட்கலை யோ?

### கட்டளைக் கலித்துறை

16. ஓங்கார மாகி, ஒருபொருள் தந்திடும் ஒண்தொடியே
ஆங்காரம் நீக்கி இரவுபகல் பண்ணிசை பாடுவாரை
நீங்கா திருக்கும் கமலினி அன்பாய் நிமலனையே
தாங்கும் திரிபுர சுந்தரி தெல்லிநகர்த் துர்க்கையம்மா!

### ஆசிரியப்பா

17. அம்மணி கௌரிசிவ சங்கரி மனோன்மணி
செம்பொருள் உரைக்கும் சிவத்தமிழ்ச் செல்வி
பதினான்கு சித்தாந் தப்பொருள் உண்மையாம்
பதிபசு பாச வுண்மைகள் உணர்த்த,
நதிபோல் நயந்தரு செந்தமிழ்த் தேன்மழை
அளித்த அமுதக் களஞ்சிய மலையே
விளிப்புட னடியேன் வித்தைகள் கற்க
சித்தம் தெளியும் சிந்தனை யருள்வாய்
நித்தம் நித்தம் உன்னை நினைந்து
உள்ளம் உருகும் உணர்வு அருள்வாய்
கள்ளம் கபடுகோள் வஞ்சகம் அற்ற
வெள்ளை மனமும், வெறுப்பன நீக்கி
பூமகள் மலைபோல் பொறுக்குந் தன்மையும்
நாமகள் நீயெனக் கருள்வாய் அம்மா!
பக்தரின் பணிகள் பாரினிற் செய்து
சித்தம் சிவமாக் கும்வகை அருள்வாய்
உலகின் உண்மைத் தெய்வம் நீயே
கலைகள் அறுபதும் உடையவள் நீயே

எங்கும் நிறைந்த எழிலும் நீயே
பொங்கிப் பொலியும் புதுமையும் நீயே
அண்டங் கடந்த அருளும் நீயே
கண்டன் அணிந்த கங்கையும் நீயே
கற்களில் வடிக்கும் சிற்பமும் நீயே
புற்களில் தோன்றும் பசுமையும் நீயே
எரியுறு நீர்போல் எங்கும் நிறைந்த
விரியுறு மலரின் மணமே! இருகரம்
கூப்பிக் கண்ணீர் சிந்தி நலியும்
காப்பவிழ் மலரணி மங்கையர் மகிழ
மங்களம் அளிக்கும் திலகக்
குங்குமத் துடனே காப்பாய் தாலியே

## ஆசிரிய விருத்தம்

18. தால விருட்சம் கூர்வா ளேந்திப்
போர்செய் வீரர் போன்றும் திரிசடை
நீல கண்டன் நிமலன் போன்றுமுன்
கோயில் சூழ்ந்து கட்டியம் கூற
ஞால மெங்கும் ஞானப் பயிர்செய்
ஞானத் தாயும் திருமுறை பாட
ஏலவார் குழலி துர்க்காம் பிகை
எரிகுண்டின் மழை நீக்குவாய் விரைந்தே

## வெண்பா

19. விரைந்து வருவினையூழ் மும்மலம் நீக்கி
நரைதிரை மூப்பகற்றி என்றும் - மரணம்
எதிர்பாரா வாழ்வினை ஏழைக் கருள்பார்
பதியே! அனைத்துலகும் நீ.

## கட்டளைக் கலித்துறை

20. நீயே! துணையென் றடியவர் விம்மி யலறியுன்னைத்
தாயே! கருணா கரியெம் பகைதீர் தயாபரியென்று
வாயாற் பரிந்துபாடி வந்திடத் துன்பம் துடைப்பவளே
நாயேன் நயந்துன் பணிசெய் குற்ற மறுத்தருளே

## அகவல்

21. ஏறும் மயில்மிசை ஆடும் முருகன்
வீறுகொள் சூரனின் வேகம் கெடுக்கக்
கூறுசெய் வேலினை வேலனுக் களித்த
சிங்க வாகன முடைய அம்மா!
அங்கம் சிதைந்து அல்லற் படுவாரும்
மான பங்கம் அழிந்து மயங்குவாரும்
தானம் தவங்குறைந் துதவித் தேங்குவாரும்
குங்குமம் பூவும் இழந்து விழுவாரும்
சங்கத் தமிழின் சிதைவு கண்டு
ஏங்கிப் புலம்பி உள்ளம் வெதும்புவாரும்
ஈழந் தன்னில் மலிய முன்னே
தாழ்சடை அண்ணலின் தேவியே! யாழின்
தெல்லி நகர்ப்பதி துர்க்காம் பிகையே
ஒல்கா மூவிலைச் சூலம் ஏந்தி
கயவரை அழிக்கும் கருணா கரியே
அயனும் மாலும் தேடியும் காணா
முழுமுதற் பொருளே! மூர்க்கரின் வேகம்
தொழுது பின்னே சென்றிட அருள்வாய்
சிவத்தமிழ்ப் பண்பினை இலங்கை முழுதும்
தவமாய்க் கொள்ள விரைவாய் அருள்வாய்
எண்திசை போற்றும் எழிலரசி எங்கும்
பண்ணிசைத் தென்றல் பரவும் கண்நிறை
காட்சி யருளத் தேவியுன்
ஆட்சி அன்புடன் நீயளிப்பாயே

## ஆசிரிய விருத்தம்

22. பாயும் கங்கையும் பாம்பும் அணியும்
பரமன் உவக்கும் கற்பக மலரே
தாயும் பிள்ளையும், கணவனும் மனைவியும்
தரணியிற் பிரிந்து தவிப்பது முறையோ
ஆயிரம் கண்களும் ஆயிரம் நாமமும்
ஆயிர மாயிரம் படைகளும் கொண்ட
தாயினும் சிறந்த தலைவியே சமரசம்
தரணியில் செய்ய வருபவள் நீயோ?

### வெண்பா

23. ஓமென் பொருளாகி நிற்கும் விநாயகரின்
ஓமென் பிரணவ மந்திரம் – நாமறிய
நீயே! அருளினை தெல்லி நகர்ப்பதித்
தாயே! அடைக்கலம் தா

### கட்டளைக் கலித்துறை

24. தாவிப் படரும் கொழுகொம் பெனநீ தரணிதனில்
ஆவித் துணையென வந்த உலகின் அலைமகளுடன்
காவிக் கமலபொற் பாதம் நெருங்கிக் குழைந்தழுவே
தேவியே துர்க்காம் பிகையே அருள்செய் தயாபரியே

### ஆசிரியப்பா

25. பரிந்தெம் அகப்புறப் பகைகள் களைவாய்
பரமேஸ் வரியே பந்த பாசம்
பிணியால் நலியா துன்னருள் பெருக்கும்
பணியால் பணிசெய் பக்தரின் செல்வமே!
மணிநிறை இராஜ கோபுர உயர்வால்
அணிநிறை தெல்லி நகர்ப்பதி யம்மா
உன்னை யன்றி உலகிற் பின்னொரு
மனிதரின் பின்னே சென்று இர[illegible]டு
வாழும் வகைதனை நாடேன் இந்தப்
பாழும் உடம்பால் பக்தி பெருக்கி
நாளும் நாளும் பரவசம் பொங்க
வினைதரு நாளும் கோளும் விலக
நினைவிற் கொள்வாய் நீலாம் பிகையே!
அன்னையே என்முகம் பார்த்துன் முன்தானை
தன்னால் கண்ணீர் துடைப்பா யம்மா
சேலின் விழியுடை யாளே இன்சுவைப்
பாலின் நெய்போல் விறகின் தீபோல்
எங்கும் நிறைந்து அங்கிங் கெண்ணாத
மங்கள நாயகி ஈழ மண்ணை
வளமாய்க் காத்திட அருள்செய் அம்மா!
களந்தரு கொடுமையால் மாட மாளிகை
கூட கோபுரம் கோயில் எல்லாம்
அழிவது முறையோ அம்மா மைநிறை

விழியுடை மங்கையர் அழுவது முறையோ?
குங்குமம் சந்தனம் நறுமண மலர்த்தொடை
தங்கத் திருநாளில் காப்பணி அம்மையே!
கற்பூர நாயகி கனக வல்லியே!
பொற்கோ யிலுறை பொன் நிறை பொன்னரசி!
அற்புத நாயகி ஆனந்த வல்லி!
கூப்பும் கரங்களுள் உறையும் நாயகி
காப்பவிழ் கடப்ப மலரணி கந்தனை
யீன்ற ஈஸ்வரித் தாயே உலகின்
சான்றோர் நடுவில் அடியே னிருக்க
நல்லருள் செய்வாய் நளினா சனியே
உன்னடி பற்றி உலகினில் வதிய
அன்புடன் காப்பாய் ஆர்வம் தருவாய்
கற்றவர் போற்றும் கனியே தேனே
நற்றவம் சிறிதுமில் நாயேன் உய்ய
பெற்றவள் நீயே பெருமை அளிப்பாய்
குற்றம் அறுப்பாய் குணங்கள் அளிப்பாய்
அன்பின் வடிவே அமுதாம் பிகையே
இன்ப விட்டினை இனிதே அடைய
பொய்யறு நிலையும் புலமையு மருள்வாய்
செய்தற் கரிய செயலும் செம்பொருள்
உரைக்கும் வன்மையும் தியான நிலையும்
கரையிலாத் தியாக புத்தியும் அருள்வாய்
மண்ணில் நல்ல பொன்னகர் தெல்லிப்
பழைப்பதி துர்க்காம் பிகையே
மழைபோற் சமரசம் மாண்பாய்த் தருகவே

### ஆசிரிய விருத்தம்

26. வேற்றுமை யகன்று ஈழ மெங்கும்
ஒற்றுமை பெருகஸ்ரீ லங்கா அரசின்
ஆற்றலால் தமிழ்சிங் களம்ஸ்லாம் இனமத
மொழிகளின் பிரச்சினை நீக்குந் தன்மையால்
மாற்றுயர் செம்பொன் தன்மைபோல் "ஒன்றே
குலம்ஒரு வனேதேவன்" என்று வாழ
ஏற்றுயர் இடபக் கொடியுடை சக்தியே
எழிலாய் அருள்வாய் திரிபுர சுந்தரியே!

## வெண்பா

27. திரிபுர சுந்தரி மாற்றுயர் பொன்னே
நெருங்கும் அடியார் புடைசூழ்-கருங்குவளை
கண்களுடை துர்க்காம் பிகையே ஈழத்தின்
மண்மிசை வந்தருள் வாய்

## கட்டளைக் கலித்துறை

28. வாயும் மனமும் உடலும் ஒருமித்து, வாழ்முதலே
நேயம் தருவாய் என்வேண்டிப் பாட அருள்சுரக்கும்
நேய முடையாளே தேடற் கரிய நகுலினியே
ஆய கலைகள் அறுபதும் தந்திடும் கற்பகமே

## ஆசிரியப்பா

29. கற்பக தருவாம் பனையேட் டினிலே
சொற்பத மெழுதப் பதிகொள் சங்கரி!
பனையின் பாலும் பழமும் நுங்கும்
அணைத்தும் நறுமணம் வீச நுகரும்
மாந்தர் உன்பதி வந்து வணங்க
சாந்தி அளிக்கும் சரஸ்வதித் தாயே!
சரியை கிரியை யோகம் ஞானம்
தெரிந்துசெய் தொண்டர் தமக்குச் சாமீப
சாலோக சாரூப சாயுச்சி யமளி
பூலோக நாயகி அன்ன பூரணி
மாலும் அயனும் தேடற் கரிய
வேல்விழி வடிவாம் பிகையே! கோணேஸ்
வரத்தில் மாதுமையாகவும் கேதீஸ்
வரத்தில் கௌரியா கவும்முன் னேஸ்வர
கோயிலில் வடிவாம் பிகையாய் எழுந்துநல்
அருள்சொரி அருளாம் பிகையே போற்றி
தூண்டு சுடரணையாய் போற்றி போற்றி
காண்டற் கரிய தேவியே போற்றி
தக்கன் மகள்தாட் சாயனி போற்றி
பக்தர் போற்றும் பரமியே போற்றி
தொழுவார் துன்பம் துடைப்பாய் போற்றி
அழுவார் கண்ணீர் துடைப்பாய் போற்றி
சித்தம் தெளியும் மருந்தே போற்றி

புத்தி யளிக்கும் புனிதமே போற்றி
வேண்டுவார் வேண்டுவ ஈவாய் போற்றி
மீண்டும் மீண்டும் இறப்பிறப் பறுக்கும்
மாண்ட மனத்தாய் போற்றி போற்றி
தந்தையும் தாயும் நீயே போற்றி
எந்தன் ஊழ்வினை அறுப்பாய் போற்றி
கல்லெனச் சிலம்பொலி செய்தே
நல்லன விளைய அருள்வாய் புதுமையே

## ஆசிரிய விருத்தம்

30. புதுமையாய்ப் புனிதமாய்ப் புலவர் கற்பனைக்
கெட்டாப் பாவையாய்ப் பண்ணின் இசையாய்
புதுமைசெய் வளமும் நவந்தரு மணியும்
பக்திதரு பஜனை செய்யும் தெல்லியம்
பதியில் எழுந்தருளும் பரமேஸ் வரியே
பைங்கிள்ளை கருங்குயில் பேசிப் பழக
அதியற் புதத்திரு முறைமுற் றோதல்
செய்யக் கடைக்கண் பார்க்கும் சக்தியே

## வெண்பா

31. சக்தியோம் ஓம்சக்தி யென்றுதினம் மக்கள்
பக்தியாய்ப் பாடினாற் றுர்க்கையே - முத்தி
அளிப்பாய் உலகத்தின் போகம் அளிப்பாய்
களிக்கும் கலையளிக்கும் நீ

## கட்டளைக் கலித்துறை

32. நீள நினைப்பவர் நெஞ்சில் நிலைக்கும் நீ லாம்பிகையே
நாளும் நலியும் அடியவர் துன்பம் பெருகமுன்னே
வாள்கணை யாலே கயவரை விரட்டி வயமளிப்பாய்
காளியே சூலியே அன்புடன் தந்தாய் கந்தனையே

## ஆசிரியப்பா

33. கந்தனும் அண்ணனும் மாதா பிதாவுடன்
விந்தைதரு திருக்கயி லையில் இருக்கும்
நாளில் மறைமுனி நாரதர் குழப்பம்
செய்ய விரும்பி மாங்கனி யொன்றை

மைநிறை கண்டன் கைகளிற் கொடுப்ப
தந்தி முகனும் செவ்வேள் முருகனும்
தத்தமக் கென்றுகை நீட்ட, உலகம்
தன்னை ஒருநொடி தன்னில் முதலிற்
சுற்றி வருபவர் தமக்கு இக்கனி
வழங்குவம் யாமென் றுநீல கண்டன்
பகர கரிநிறை யானை முகனும்
நகர்ந்து எழும்புமுன் நீல மயில்மிசை
வேலனும் புவனம் சுற்றி வருமுன்
பேழை வயிறன் அன்னை தந்தையே
உலகென வலம்வந் தக்கனி வாங்கி
சிலகனம் வணங்க ஒருநொடிப் பொழுதில்
அகிலம் வேகமாய் சுற்றி வந்த
ஜெகதலம் ஆறு படையுடை முருகன்
அதனைக் கண்டுள் மனமும் வெதும்பி
மிகமிஞ் சுவெகுளி மேலிட மேலிட
பெற்றா ரைவிட்டகன்று தண்ட பாணி
பொற்கோ லம்தாங் கிடவேல னும்மலை
உச்சியிற் பதிகொள "நீயே ஞானப்
பழமென" கூவி யழைத்த உமையே
மழையெனக் கண்ணீர் வடிக்கும் பர்
முகந்தனைப் பாரா ததேனோ? எம்மவர்
அகமும் புறமும் மகிழ அன்புமழை
சொரிவாய் அம்மா ஆழிசூழ் இலங்கை
அரசும் இனமத பேத மின்றி
ஒன்றே குலம்ஒரு வனேதே வனென
நன்றாய் உணர்ந்து நன்மை செய்யும்
சமரசம் பேண அருள்வாய் அம்மா
வேகமாய் வந்தே வாதம் தீர்ப்பாய்
யாகமும் ஓமத் தீயும் விரும்பும்
யோக வல்லியே வருவாய் வருவாய்
யோக நிலையெனக் கருளிட வருவாய்
பங்கைய பாதம் பணியும் பக்தர்
அங்கம் சிலிர்க்க அருளும் அம்பிகையே
மங்கள வாரம் செவ்வாய்க் கிழமையில்
மங்களத் திருவிளக் கேற்றும் மங்கையர்

மகிழும் வரமளி மகேஸ்வரித் தாயே
சங்கத் தமிழ்ப்படைப் புலவர் மகிழ
நாவி லுறையும் சரஸ்வதி தாயே
சரணம் சரணம் என்பார் மனக்குறை
தருணம் பார்த்து நீக்க வருவாய்
தெல்லி நகர்த் துர்க்காம் பிகையே
நல்லருள் செய்வாய் நளினா சனியே
பொற்கரம் நீட்டிக் கதிரவன் வருமுன்
நற்கதி நாடும் மாந்தர் உள்பதி
வலம்வர வேதியர் வேதம் ஓத
நலம்செய் தேவியே யென்றும்
கலகம் நீக்குவாய் முத்து மாரியே

## ஆசிரியவிருத்தம்

34. முத்து மாரித் தாயே யெனவுன்
மனங்கவர் கீதம் பாடிப், பட்டு
முத்துவெண் கொற்றக் குடைவெண் சாமரை
மணம்நிறை மாலையும் அளிக்க விரும்பும்
பத்தினித் தெய்வமே! பக்தர் அழுங்குரல்
பரவுவது நீயும் அறிவாய் அன்றோ?
சித்தம் சிவனெசய் சுந்தரி உன்னைச்
சரணடைந்தால் அளிப்பாய் அறுபத் துநான்கே

## வெண்பா

35. அறுபத்து நான்கு கலைகள் அளிக்கும்
சிறுத்த யிடையுடை யாளே!-மறுமையிலும்
உன்னை மறவா திருக்க உமையவளே
என்வினை வேகமாய்நீக் கு

## கட்டளைக் கலித்துறை

36. குங்குமம் சந்தனச் சாந்தணி அங்கையற் கண்ணியே யுன்
மங்கையர் எல்லாம் உடமை யிழந்து மெலிந்துவாடி
சங்கத் தமிழினாற் பாமாலை பாடச் சமரசம் செய்ய
சிங்கக் குருவாமீ தேறி அளிப்பாய் அடைக்கலமே

## ஆசிரியப்பா

37. ஏழ்பவம் நீக்கும் ஏந்திழை போற்றி
ஊழ்வினை துடைக்கும் உத்தமி போற்றி
உள்ளங் கவர்துர்க காம்பிகை போற்றி
தெள்ளத் தெளிந்த தேனே போற்றி
மீனவர் போற்றும் மீனாட் சிபோற்றி
ஊனும் உயிரு மானாய் போற்றி
நின்றும் இருந்தும் கிடந்தும் என்றும்
நன்றாய் நினைப்பவர் நெஞ்சில் உறையும்
சிவகாம சுந்தரி போற்றி போற்றி
நவக்கிர கநாயகி போற்றி போற்றி
படைப்பாய் காப்பாய் அழிப்பாய் போற்றி
படைகல மாகவே ஐந்தெழுத் தருளி
சிவபத மளிப்பாய் போற்றி போற்றி
தவமும் தானமும் அருள்வாய் போற்றி
இறைவன் அருளிய ஆகம விதிப்படி
சிறைவண் டினம்ரீங் கார நாதம்
பாடும் சோலைகள் சூழ்ந்த தெல்லியில்
ஆடும் கூத்தன் மகிழ வந்தனை
தேடற் கரியதங் கம்மா அளித்தனை
திருமுறை அமுதக் களஞ்சியம் அளித்தனை
அருள்நிறை ஆனந் தவெள்ளம் அளித்தனை
குருவருள் திருவருள் அளித்தாய் போற்றி
பாரத நாட்டில் முன்னொரு நாளில்
பசியினால் வாடிய அந்தகன் ஒருவன்
வசியும் வளம்மிகு இலங்கை வந்து
மன்னர் முன்னே திரைமறை விலிருந்து
இன்சுவை நாதம் பெருக்கும் யாழினை
ஏந்தி அரசனின் முகக்குறி ப்புகளை
மாந்தரும் அறிய வாசிக்க, அவையும்
தெவிட்டாத் தேனாய் மன்னன் செவியினுட்
பாய்தலும் அரசன் மகிழ்ந்து இலங்கையின்
வடக்கில் மணற்தரை வழங்கலும் குருடன்
திடமாய் அதனை வளந்தரு நிலமாக்கி
பெருமை பெறுந்தமிழ் மக்களைக் கொணர்ந்து
அருமையாய்க் குடியேற் றிவசியும் வளனும்

பெருக்கி யாழ்ப்பா ணமென நாமமிட
ஆழ்கட லரகர எனுமொலி ஒலிக்க
நீள்தெரு வீதிகளும் மாட மாளிகை
கூட கோபுரம் கோயில் பெருகும்
அழகினை காணப் பொற்கரம் கூப்பி
அழகுசெய் ஞாயிறும் பாணர் புகழும்
பூரண கும்ப மதியும் மீன்களும்
நாரணன் மேனிபோல் நீல வானக்
கடலில் மிதப்ப தாக மீன்கள்
மடல்களைக் கீறிப் பாயத் தேன்பாய்
சோலைநிறை தெல்லியம் பதிகளில் வேதியர்
காலையில் வேதம் ஓத, ஓதுவார்
பண்ணொடு திருமுறை ஓதி மகிழமுக்
கண்ணன் நடனம் நகுலேஸ் வரத்தில்
செய்ய மாவைக் கந்தனும் பசுமேய்
மைவண்ண னும்கண பதியும் மகிழ
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ளாவது
நாதன் நாமம் நமச்சிவாய மந்திரம்
வீதி யெங்கும் முழக்கம் செய்ய
ஒல்காப் பெரும்புகழ் தெல்லியம் பதியில்
தொல்லை வினையறு துர்காம் பிகையாய்
கோயில் கொண்ட கருணா கரியே
தாயிலும் சிறந்த துர்க்கா துரந்தரி
நோய்நொடி யின்றி பலபல ஆண்டுகள்
பாரினில் புகழொடு வாழ அருள
நேரினில் நிற்பாய் போற்றி போற்றி
எல்லையில் செந்தமிழ் தேன்சொரி ஈழம்
பல்கலை பொங்கிப் பொலிந்து சீர்மிகு
அகில உலகும் வியக்க அருள்வாய்
நகுலாம் பிகையே போற்றி போற்றி
வந்தரு அப்பாக் குட்டி தங்கம்மா
வந்தரு உலகினில் அறுபத் தெட்டாம்
பிறந்த தினமாம் ஜெனவரி ஏழாம்நாள்
சிறப்பொடு பொலிந்து சீரொடு விளங்க
நறும்பால் சுவைமிகு அன்னையே அருள்வாய்
உறுதிசெய் உடலும் நீள்தரு வயதும்
அறுகுபோல் வேருன்றி ஆல்போல் தழைத்து
யாண்டும் யாண்டும் இளமைப் பொலிவாய்

வேண்டும் வரங்க ளளிக்கும் தேவியே
கொடுத்தே காத்திட நினைவாய் போற்றி
ஏகம் அநேக முடையாய் போற்றி
பாகம் பெண்ணொரு பாகனே காப்பாய்
ஏக தந்தை விநாயகா காப்பாய்
ஞான வேலினை யேந்தும் கந்தனே
ஞானத் திருவா சகக்கொண் டலினை
ஞானத் தாயாம் தங்கம் மாவைக்
காப்பாய், திரிசூல வைரவரே காப்பாய்
ஞான வாணி இராஜ இலட்சுமி
வானம் சொரிமழை போன்று வள்ளலாய்
பல்லாண் டுவாழ பல்லாண் டருள்சொரி
செல்வக் களஞ்சியத் துர்க்காம் பிகையே
வேகமாய் வேண்டும் வரங்க ளளிப்பாய்
தாகம் கொள்ளும் அடியேன்
யோகமாய் பறையும் சொற்களைக் காக்கவே

## ஆசிரியவிருத்தம்

38. வேலை ஒலிநாதம் ஓமோம் என்றிசைக்க
ஓலைக் குடிலில் அமர்ந்த தாயே
தால விருட்சம் பூலோகக் கற்பக
தருவாய் காவலொடு உன்னைத் தாலாட்ட
சாலச் சிறந்த சிறுமி தங்கம்
தானும் உன்பதி யும்வளர்ந் தோங்க
ஆலயம் வலம்வந்து திருமுறை பாடிய
தன்மையால் மிளிர்ந்தாய் அன்பின் மணியே

## வெண்பா

39. மணியே மணியின் ஒலியே தங்கம்
அணிந்த அணியே அடியார்-பிணிக்கு
மருந்தே மயக்கும் மலங்கள் அறுக்கும்
மருந்தாய் அருள்சூல மே

## கட்டளைக் கலித்துறை

40. சூலினி! சந்தன குங்கும நாயகி சாம்பவியே
மாலின் சகோதரி தங்கச் சிலையே மனிதகுலம்
பாலின் நறுநெய் பொரிநெல் அவிதரப் பந்தபாசம்
வேலின் விழியால் வறுத்தருள் வாயேழ் தலங்களிலே

ஓம் சாந்தி

# கொழும்பு செக்கட்டித்தெரு பதி
# ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி
# மகாகும்பாபிஷேகம்

## விநாயகர் வணக்கம்

செக்கட்டி வீதிப் பதியுறை செவ்வேளை
பக்திப் பதிகம் நான் பாடவே-விக்கினம்
தீர்க்கும் விநாயகனே தேன் பால் தமிழிசை
நோக்கி யருளவேண்டும் நீ

1. வெண்கரை நீலப் பட்டணி இலங்கை
அன்னையின் நவரத்தினமகுடம் கொழும்பின்
தண்டமிழ் மணக்கும் செக்கட்டித் தெருவில்
தண்ணிழ லளிக்கும் இந்துக் கோயில்
அண்டரும் மனிதரும் அங்கை கூப்ப
அந்நிய மதங்களும் அதிசய மடையவே
கண்டனளி கதிர்வே லாயுத சுவாமி
கோயிலின் குடமுழுக்குக் காணலாம் வாரீரே.

2. முத்தொழி லியற்றும் முருகன் பதிகளில்
முன்னைப் பழம்பொருளாய் முன்னிற்கு மாலயம்
சித்தம் தெளிந்த செக்கட்டித் தெருவின்
சித்திரச் சிந்தனைக் கோபுரக் கோயிலாய்
எத்திக்கும் அருளொளி பூரணமாய் வழங்கும்
எழில்மிகு கதிர்வேலாயுத சுவாமியின்
பக்தரின் ஞானொளி சொரியும் இராஜ
கோபுரக் குடமுழுக் கிணைக்கா ணீரே.

3. மாணிக்கத் தீவின் மரகத மலைபோல்
மாட மாளிகை கடைகள் சூழ் வீதியில்
காணிக்கை யேந்தி மங்கையர் வலம்வர
கருணைசொரிகதிர் வேலனே முருகா

ஏணிக்கு ஏணியாய் உயரும் இராஜ
கோபுரம் வான்தோய் அற்புதங் காண
வாணிக்கு வாக்களி வள்ளி தெய்வானை
மகிழ்குட முழுக்கினைக் காண வந்தனையே.

4. குன்றுகள் தோறும் குடிகொள் குமரனே
குஞ்சரக் கன்றின் தம்பியே ! தமிழின்
மன்றுகள் தோறும் இடங்கொள் வேலனே
மனிதரும் மூவரும் வணங்க உதித்த
நன்றுசெய் ஆறு முகனே என்றும்
நயம்விளை கொழும்பின் செக்கட்டி வீதியில்
நன்றாய்ப் பதிகொள் வேல்விழிவள்ளி
மணவாளா குடமுழுக்கினையரு ளினாயே.

5. அமரர் சிறைமீட்க வேலினைத் தொட்ட
அழகனே செந்தில் வேளே முருகனே
நமனும் பகையும் பிணியு மகலவே
நலம்செய் வேலினை மூல மூர்த்தியாய்த்
தமராம் பரிவார மூர்த்திகள் சூழ்ந்து
தரணி காக்கவே செக்கட்டித் தெருவில்
அமரரும் ஆனந்த மடையவே, கந்த
சுவாமியே குடமுழுக் கினைக்கண்டீரே.

6. சக்தி யளித்த வேலால் சூரருடன்
சமர்செய் சரவண பவனே! குகனே
சக்தி செக்கட்டித் தெருவிற் பொழியவோ
சரண கோசம் முழங்கக் கோயிலின்
சக்திசெய் மூல மூர்த்தி வேலாய்
சக்திகள் சூழ நின்ற ஐயனே !
முத்தி யளிக்கும் முருகனே தொண்ணூற்றி
மூன்றில் குடமுழுக் கினைக்கண்டீரே.

7. முக்கனிச் சாறும் கற்கண்டின் பொடியும்
நறுஞ்சுவைத் தெங்கின் பாலும் கலந்து
பக்குவமாய்க் காய்ச்சிய பாகின் சுவையே !


பனித்திளம் பிறையணி சடையான் அருளிய
அக்குமணிமாலை அணியும் அழகனே
எழில்நிறை கொழும்புமா நகரின் மத்தி
செக்கட்டித் தெருவில் பதிகொள் செந்தில்
வேளே குடமுழுக்குக் காண வருவீரே.

8. ஆயிரம் ஆயிரம் யாகம் செய்யும்
அந்தணர் ஒருபால், வேத மோதவும்
மாயிருள் மாய்க்கும் ஞாயிறு பொன்னொளி
பரப்பி சாமரை வீசவும், செந்திலின்
வாயிலும் வாக்கிலும் பொங்கித் ததும்பும்
இன்பப் பக்தி வெள்ளம் பெருகவும்
தாயிலும் சிறந்த தலைவனே செக்கட்டிப்
பதியில் குடமுழுக் கினைக்காண லாமே.

9. தங்கத் தமிழிசை இலங்கை யெங்கும்
தண்ணளி யளிக்கும் வேலை ஒருபால்
பங்கயச் செல்வியர் வலமிடம் அமரப்
பழியறு வேலும் மூல மூர்த்தியாய்
எங்கும் அபயம் அளிக்கும் வேலை
ஒருபால், சூரனை வென்றவேல் ஒருபால்
மங்களம் இயம்ப செக்கடித் தெருவில்
முருகன் கோயிலும் காணும் முழுக்கே.

10. ஆழிசூழ் இலங்கையின் மகுட மணியாய்
ஆனந்தம் அளிக்கும் செக்கட்டித் தெருவில்
ஏழிசை யியம்பப் பதிகொள் முருகனின்
எழில்நிறை ஞானவேல் துன்பம் துடைத்து,
யாழிசை போன்றே தமிழ்மொழி வளர்ப்பான்.
யாத்திரை செய்யும் அன்பர் குழாமும்
ஏழ்பவம் தாண்டி யுன்பொற் பதங்கள்
அடையவே குடமுழுக் கினைக்காண்ண பார்களே.

சைவநன்மணி சிவமயச்செல்வி
புலவர். சி. விசாலாட்சி
21-13-1993 ல் வீரகேசரியில் பிரசுரமாக்கப்பட்டது.



அன்புடன்
வசந்தா வைத்தியநாதன். ஜே.பி.